1990 மார்ச் 19]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் சாகோ தொழிற்சாலைத் தொடங்கவேண்டும் என்றால் 1 இலட்சத்து 25 ஆயிரம் லிட்டர் தண்ணீர் அந்தத் தொழிற் சாலைக்குத் தேவைப்படுகிறது. கல்வராயன் மலைப்பகுதி வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு பருவக் காற்றால் மழை பெறு கின்ற பகுதி. மேலும், அங்கே ஏரியோ, ஆற்றுப் பாசனமோ கிடையாது. எனவேதான் தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே அமைக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. கீழ் மட்டத்தில் சில இடங்களில் ஒரளவிற்குத் தண்ணீர் கிடைக்கிறதா என்பதற்கு நிலத்தடி நீர் ஆய்வு நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையை வைத்துத் தான் அந்தப் பகுதியில் சிறிய அளவிலாவது சாகோ ஸ்டார்ச் தொழிற்சாலை அமைக்க இயலுமா என்பதை அரசு பின்னர் பரிசீலிக்கும்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் சாகோ பாக்டரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும், கரியக்கல் டேம் என்று பாப்பநாயக்கன் பட்டியில் தற்போது கட்டிக்கொண் டிருக்கிறார்கள். அங்கே தண்ணீர் வசதி இருக்கிறது. அரசு மீண்டும் பரிசீலனை செய்து அந்த இடத்திலாவது கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிச்சயம் பரிசீலனை செய்யும்.

சீர்காழியில் புதிதாக ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி கட்டுதல்,

* 2240—டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழியில் புதிதாக ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம் சீர்காழியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சீர்காழியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி

வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கூட மாணவர்களுக்குப் போதிய சுகாதார வசதியும் இடவசதியும் இல்லாது இருக்கின்ற நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து அதி கப்படியான ஆதிதிராவிட மாணவர்கள் படிக்கின்ற சீர்காழிப் பகுதியான அந்தத் தலைமைப் பகுதியிலே மீண்டும் ஒரு விடுதி கட்டித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் சீர்காழியில் ஆதி திராவிட மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டப் போதிய நிலம் தற்போது தயாரான நிலையில் இல்லை. போதிய நிலம் கையகப்படுத்தப்பட்டால் அரசு அதை பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலியில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம்.

*2095— திரு. என். கணேசமூர்த்தி: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலியில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கழக ஆட்சியில்தான் நெய்வேலி பகுதியிலே வாழ்கின்ற அகதிகளுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கப் பட்டது. விவசாயிகளின் நிரந்தர வேலைவாய்ப்புக்கு விவசாயப் பண்ணை அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதற்கு முன்பிருந்த அரசு நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக அந்தப் பண்ணையை மூடிவிட்டது. இப்போது இருக்கின்ற அரசு மறு படியும் பரிசீலனை செய்து அந்தப் பண்ணையை மீண்டும் துவக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-55 மணி.

மாண்புமிகு திரு. கே, என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அதுபோல ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படும்,